**செ. கு. எண்**:171 **நாள்**:07.05.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 7.5.2012

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், நாயக்கன்பாளையம் கிராமம், அருள்மிகு பாலமலை அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் 5.5.2012 அன்று நடைபெற்ற தேர் ஊர்வலத்தின் போது தேர் சக்கரம் பாறையில் சிக்கி, தேர் கவிழ்ந்ததில் கோயம்புத்தூர் தெற்கு வட்டம், ஒத்தக்கால் மண்டபத்தைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் என்பவரின் மகன் திரு. பன்னீர்செல்வம் தேருக்கு அடியில் சிக்கி பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த திரு. பன்னீர்செல்வத்தின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான திரு. பன்னீர்செல்வத்தின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**

தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**